செ.வெ.எண்: 18 நாள்: 05.08.2016

# பத்திரிகைச்செய்தி

## தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் -நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள் நரிக்குறவர் இன மக்களுக்கு நரிக்குறவர் நலவாரியத்தின் மூலம், பதிவு பெற்ற நலவாரிய அட்டைகள் மூலம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் விபரம் பின்வருமாறு.

1. விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ் உதவித்தொகை

(அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை ரூ.1,00,000/- (ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000 முதல் 100000/- வரை (2) இயற்கை மரணம் ரூ.15,000/- (3) ஈமச்சடங்கு செலவினம் ரூ.2,000/- (4) கல்வி உதவித்தொகை (அ) ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு ரூ.500/- (ஆ) 6 வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு ரூ.1,000/- (இ)10-ஆம் வகுப்பு படித்துவரும் பெண்குழந்தைகளுக்கு ரூ.1,000/- (ஈ)10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,000/- (உ) 11-ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/- (ஊ) 12-ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/- (எ) 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,500/- (ஏ) (i) முறையான பட்டப்படிப்புக்கு ரூ.1,500/- (ii) மாணவரில்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு ரூ.1,750/- (ஐ) (i) முறையான பட்டமேற்படிப்பிற்கு ரூ.4,000/- (ii) மாணவரில்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு ரூ.5,000/- (ஒ) (i) தொழில்கல்வி பட்டப்படிப்புக்கு ரூ.4,000/- (ii) மாணவரில்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு ரூ.6,000/- (ஓ) (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு ரூ.6,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்ப்படிப்புக்கு ரூ.8,000/- (ஔ) (i) ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு ரூ.1,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு ரூ1,200/- (5) திருமண உதவித்தொகை ரூ2,000/- (6) மகப்பேறு உதவித்தொகை (அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ6,000/- (ஆ) கருச்சிதைவு/கருக்கலைப்பு ரூ3,000/- (7) மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ரூ500/- (8) முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ1,000/- (9) தொழில்தொடங்க மானியம் (அ) தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம் ரூ7,500/- (ஆ) குழுவாகத் தொழில் தொடங்க மானியம் ரூ10,000 தனிநபருக்கு (அல்லது) ரூ.1,25,000 அதிகபட்சமாக குழுவிற்கு

எனவே நரிக்குறவர் நல வாரிய பதிவு பெற்ற உறுப்பினர்கள் மேற்சொன்ன திட்டங்களின் கீழான தங்களது, கோரிக்கை குறித்து புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறான கோரிக்கை குறித்து வேறு அரசு திட்டங்கள் மூலமாகவோ இதர வேறு நலவாரியத்தின் மூலம் பயன் பெற்றிருக்க கூடாது. தவிரவும் இதுவரை நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விடுபட்ட நரிக்குறவர் இனமக்கள், புதுக்கோட்டை மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் உடனடியாக தங்களை பதிவு செய்துகொள்ளவும் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**